**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No,53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**STC.No. 96/2023**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | மாதவி(PW2) | | |
| Husband's Name | விஜயகுமார் | Calling | தலைமைக் காவலர் |
| Village | | | |
| Taluk | திருச்செங்கோடு | Age | 43 |
| District | நாமக்கல் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th **day of August 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused 1 and 2 Present)*

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017 ஆம் வருடம் நான் அவிநாசி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த சமயத்தில் கடந்த 07.05.2017 தேதி 20.30 மணி அளவில் அவிநாசி காவல் நிலைய உதவி ஆய்வாளர் காமராஜ் அவர்களுடன் நானும் முதல் நிலை காவலர் காமராஜ், தலைமை காவலர் அய்யாதுரை ஆகியோர் அவிநாசி தேர் திருவிழாவை முன்னிட்டு பாதுகாப்பு அலுவிலில் இருந்தபோது காந்திநகர் காமாட்சி அம்மன் கோவில் அருகே தகராறு நடப்பதாக கிடைத்த தகவலின் பெயரில் அங்கு சென்று பார்த்தபோது பின்னர் பெயர் கேட்டு தெரிந்த வழக்கில் எதிரிகளான மாணிக்கம், மற்றும் பிரகாஷ் ஆகியோர் தகாத வார்த்தைகளால் பொது இடத்தில் பேசிக்கொண்டு இருந்தார்கள். அவர்களை உதவி ஆய்வாளர் எச்சரித்தும் பொது இடத்தில் இது போன்று தகராறு செய்யக்கூடாது என்றும் சொல்லி அவர்கள் கேட்காததால் அவர்களை 21.15 மணிக்கு கைது செய்து நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்தார். பின்னர் அவர்களுக்கு குடி போதை சான்று பெறுவதற்காக காவலர்கள் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு யார் தகவல் கொடுத்தது என்றால் ஏ ஆர் போலீஸ் சொன்னதன் பெயரில் சம்பவ இடத்திற்கு சென்றோம். அப்போது தேர் எந்த இடத்தில் இருந்தது

என்றால் குலாலர் வீதியில் தான் இருந்தது. அதன் பின்பு தேர் எங்கு நின்றது என்றால் அவர்களை கைது செய்து காவல் நிலையம் சென்று விட்டோம் அதன் பின்பு எங்கு நின்றது என்று எனக்கு தெரியாது. என்னுடைய விசாரணையில் யாரை குறிப்பிட்டு பேசினார்கள் என்று குறிப்பாக இல்லை என்றால் பொது இடத்தில் பேசினார்கள், யாரை குறிப்பிட்டு பேசினார்கள் என்று இல்லை. அன்றைய தினம் எத்தனை நபர்கள் தேருக்கு வந்திருப்பார்கள் என்றால் சுமார் 5000 நபர்கள் வந்திருப்பார்கள். அப்போது மாணிக்கம் பேரூராட்சியில் கவுன்சிலராக இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் காமாட்சியம்மன் கோவில் அருகே சென்று இவர்கள் பேசிக் கொண்டிருந்ததாக பார்த்ததாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல. அரசியல் உள்நோக்கத்திற்காக பழிவாங்கும் நோக்கத்துடன் கொடுக்கப்பட்ட புகார் என்றும் அப்போது இருந்த காவல் உதவி ஆய்வாளர் சரிவர விசாரணை செய்யாமல் இவர்கள் மீது பதியப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு எதிரிகளை அழைத்து சென்றபோதும் நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |